**மாங்காடு நகராட்சி**

**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்

குறள்- சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு

விளக்கம்- அறம் சிறப்பையும் அளிக்கும், செல்வத்தையும் அளிக்கும், ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு ஏது.

—***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஜனவரி **2025** மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜனவரி **2025** மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு நகராட்சியின் பொதுநிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளின் வரவு செலவு திட்டத்தின் 2024-2025ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2025-2026ம் ஆண்டின் திட்ட மதிப்பீடு (Budget) நகர்மன்றத்தின் பார்வைக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**-மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியின் 2024-2025 ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2025-2026ம் ஆண்டின் திட்ட மதிப்பீடுகள் தயாரித்து வழங்கியமைக்கும் 2024-2025ம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆண்டு கணக்குகள் கணிணியில் தொகுத்து உரிய படிவங்களில் பூர்த்தி செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை செங்கல்பட்டு அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி பணிகளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் முடிக்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,00,000/-ற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.6**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற புத்தக திருவிழா 2025ல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்ட உத்தரவின் பேரில் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு ஆரம்பபள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளும் விதமாக தேவையான புத்தகங்களை வாங்கி விநியோகிக்குமாறு உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின் படி நேரடியாக புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது அதற்கான செலவினம் தொகை ரூ.18855/-ஐ நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அ.கு.</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ-18855/-வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் காணொளி ஆய்வு கூட்டத்தில் தீவிர வசூல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே சொத்துவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம், காலி மனைவரி, கடை வாடகை மற்றும் Trade Licence அனைத்து இனங்களையும் செலுத்தகோரி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ விளம்பரம் வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் விளம்பரம் செய்தது ஆட்டோ வாடகை மற்றும் ஒலிபெருக்கி வாடகை ஆகியவற்றிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அ.கு.</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

மாங்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ,இந்நிகழ்வு தினசரி குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. குப்பைகள் சேர்ந்து இருக்கும் பகுதியில் குப்பைகள் அகற்றப்பட்டதுடன் கிருமிநாசினியாக நீர்த்த சுண்ணாம்புடன் பிளிச்சிங்பவுடர் கலந்து தெளிக்கப்பட வேண்டும். அதன் படி சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் தினசரி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் திருவிழாக்காலங்களிலும் சுண்ணாம்பு தெளிக்கப்படுகிறது.

எனவே தினசரி நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சீங் பவுடர் தெளிக்க பயன்படுத்தப் படுவதால் தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் அவசர அவசியம் கருதி30,000 கிலோ நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் 10,000 கிலோ வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.9,00,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்

## பொருள் எண்.9

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., தற்போது அவர்களின் பணிக்காலம் முடிவடைந்ததால் பொது மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் 10.01.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளிஅளித்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 27 வார்டுகளில் டெங்கு மஸ்தூர் களப்பணி மேற் கொள்ளுதல் பணி | 207380160 | திருவாளர். புளூமிங் ரீசைக்கிள்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.40 % குறைவு |
| | | | திருவாளர். ட்ரைடு இன்ப்ரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.20 % குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Blooming Recycles நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.10

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளான மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணி, பிளாஸ்டிக் ஒழிப்பு ப.ணி, மழைநீர் சேகரிப்பு பணி ஆகிய பணிகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தி கொடுத்த திருவாளர். வெங்கடாஜலபதி நாடக சபாவுக்கு ரூ.15000/- செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.11

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல் பணிக்காக ஒப்பந்தப்புள்ளிகள் 24.01.2025ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 1 முதல் 14 வரை உள்ள நகராட்சி சாலைகளில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல். | 9.50 | திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக் ஷ ன்ஸ் பி.லிட்., | மதிப்பீடு தொகையை விட 0.14% குறைவு |
| | | | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.01% அதிகம் |
| 2 | வார்டு எண். 15 முதல் 27 வரை உள்ள நகராட்சி சாலைகளில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல். | 9.50 | திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக் ஷ ன்ஸ் பி.லிட்., | மதிப்பீடு தொகையை விட 0.14% குறைவு |
| | | | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.05% அதிகம் |

**அலுவலக குறிப்பு**:- மேற்படி பணிகளுக்கு மதிப்பிட்டை விட 0.04 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஷ்ட்ரக் ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளிக்கு,பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

## பொருள் எண்.12

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான Canon - Xerox Machine NPG-67 (Black & color (4)) Toner - 10 Nos அவசர அவசியம் கருதி, அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டியில் விலைப்புள்ளி பெற்று வாங்கிக் கொள்ளவும், தோராய செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் எண்.13

மாங்காடு நகராட்சியில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2024-2025 ன் கீழ் பின்வரும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 07.02.2025ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் சக்தி நகர் பகுதியில் நியாயவிலைக்கடை கட்டிடம் கட்டுதல் பணி | 17.00 | திரு.டி.தீனரங்கன் | மதிப்பீடு தொகையை விட 0.20% குறைவு |
| | | | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.58% அதிகம் |
| 2 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் பட்டூர் பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணி | 17.00 | திருவாளர் கே.ஜி.ஆர்.குரூப்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.02% குறைவு |
| | | | திருவாளர் ஆரோக்கியநாதன் கன்ஸ்டிரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 4.98% அதிகம் |

**அலுவலக குறிப்பு**:- மேற்படி பணிகளுக்கு மதிப்பிட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.14

இந்நகராட்சி அலுவலகத்தில் உபயோகத்தில் உள்ள அனைத்து CCTV கேமரா மற்றும் அதன் DVR பாக்ஸ் தற்போது பழுதடைந்து செயல்பாட்டில் இல்லாததால் அதனை பாதுகாப்பு கருதி அதனை பொருத்திய திருவாளர் .SVJ Smart Solution நிறுவனத்தார் மூலம் உடனடியாக பழுது நீக்கம் செய்யப்பட்டு அதற்குண்டான பட்டியல் தொகை ரூ.11,398/- வரப்பெற்றுள்ளது. எனவே அதற்கான பட்டியல் தொகை பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-
1. அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.15

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை 2024 ன் போது பெய்யும் பெருமழையினால் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை சூழ்ந்து தேங்கிய மழைநீரினை நகராட்சிக்கு சொந்தமான டீசல் மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்ற வேண்டியுள்ளது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான உயர்மின் மோட்டார்களை இயக்கிட தேவையான டீசல் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தி நிவாரண பணிகள் மேற்கொள்ள அதன்படி டீசல் மோட்டார்கள் மற்றும் ஜெனரேட்டர் இயக்கத்திற்கு தேவையான டீசல் நகராட்சி வாகனத்திற்கு எரிபொருள் சப்ளை செய்யும் திருவாளர் தில்லை நடராஜா ஏஜென்சீஸ்

நிறுவனத்திடமிருந்து அக்டோபர் மாத காலத்தில் கொள்முதல் செய்த 570.70 லிட்டர் மற்றும் இனி நவம்பர் மற்றும் டிசம்பர் மாத காலங்களில் பெய்யும் வடகிழக்கு பருவ மழையின் போது தேவைப்படும் டீசல் கொள்முதல் செய்யவும் மேற்படி வெள்ள நிவாரணப்பணியின் அவசர அவசியம் கருதி ஏற்படும் கூடுதல் எரிபொருள் செலவினத்திற்கு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.16

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக ஆணையர் அவர்களுக்கு இயக்கப்படும் ஈப்பு வாகனத்தின் (வாகன எண்.TN85U9200) வாகன காப்பீடு கடந்த 05.01.2025 அன்று காலாவதியாகியுள்ளதால் மேற்படி வாகனத்தின் காப்பீட்டை புதுபிக்க FUTURE GENERAL என்ற காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ. 12958/- வரப்பெற்றுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.12958/-ஐ பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.12958/- ஐ வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.17

இந்நகராட்சியில் 2024-2025ஆம் நிதியாண்டில் பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் தினசரி நடக்கும் நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகைபுரியும் நாட்களில் நடைபெறும் ஆய்வு பயணங்கள் மற்றும் கடந்த 76வது குடியரசு தினவிழாவில் நடந்த நிகழ்வுகள் என ஆகியவற்றை நிழற்படங்களாக எடுத்து புகைப்பட தொகுப்பாக வழங்கியமைக்கு திருவாளர் ஸ்ரீ பாலாஜி ஸ்டுடியோஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.21000/- க்கான பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டில் தொகையினை பொது நிதியில் வழங்கவும், மேலும் இனி வரும் காலங்களில் முக்கிய நிகழ்வுகளை புகைப்படம் எடுக்கும் பணிக்கு தோராய செலவினம்ரூ.60,000/-க்கு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.18**

மாங்காடு நகராட்சியில் கணினி இயக்குதல் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.506/நாள்.12.01.2024ன்படி ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் திருமதி.P.ரோசி என்பவருக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2023–2024ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலைவிதப்படி டிசம்பர் 2024 வரை ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. மேற்படி ஒப்பந்தகாலம் டிசம்பர் 2024 வரை முடிவடைவதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை மேலும் ஒரு மாதங்களுக்கு (மார்ச் 2025) மட்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1. மேற்படி பணியாளருக்கு மார்ச் 2025 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதத்தின் படி ஊதியம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.19**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள திருமுருகன் நகர் பிரதான சாலையில் குன்றத்தூர் நெடுஞ்சாலை முதல் பள்ளி நுழைவு வாயில் வரை சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதாலும், மழைக்காலங்களில் சாலையில் ஏற்பட்ட பள்ளங்களினால் அவ்வப்போது சிறு சிறு விபத்துக்களும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் அப்பகுதியில் அமைந்துள்ள திருவாளர் RISHS INTERNATIONAL SCHOOL., பள்ளி நிர்வாகம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% பங்களிப்புடன் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க அனுமதி கோரியதை மன்றத்தின் பாவைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1. வார்டு எண்.4 திருமுருகன் நகர் பிரதான சாலையில் (குன்றத்தூர் நெடுஞ்சாலை முதல் பள்ளி நுழைவு வாயில் எண்.2 வரை) திருவாளர் RISHS INTERNATIONAL SCHOOL., பள்ளி நிர்வாகம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% பங்களிப்புடன் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்துக்கொள்ள நிபந்தணை களுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிநோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை தொடந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் பொதுநிதி 2024-25ன் கீழ் வார்டு எண்.3ல் உள்ள கணபதி நகர் பகுதியில் ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.651 நாள்.22.08.2024ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, 07.11.2024ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மதிப்பீட்டை விட 0.08% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று முறையே ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான மூலமதிப்பீட்டில் சாலையின் நீளம் 255.00 மீட்டர் நீளத்தில் 4.00 மீட்டர் அகலத்தில் தார்த்தளம் மட்டும் புதுப்பித்திடும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி கணபதி நகர் சாலை மிகவும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளதால் கடந்த பருவ மழைக்காலங்களில் சாலை பெருமளவில் சேதமடைந்து போக்குவரத்திற்கு இடையூரான நிலையில் உள்ளதால் இச்சாலையில் பழுதடைந்த அடித்தளத்தினை சீரமைக்காமல் தார்தளம் மட்டும் புதுப்பிக்க இயலாத நிலை உள்ளது. மேலும் கடந்த பருவ மழையினால் சேதமடைந்த இச்சாலையில் அரசின் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலையை ஈரக்களவை (WMM) அமைத்து அதன் மீது தார்தளம் அமைக்க முறையே திட்ட நிதி பெறப்பட்டு இத்திட்டப்பணிக்கு 17.02.2025ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. தற்போது அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் தனது கடிதத்தின்படி கணபதி நகர் பகுதியில் சாலை அமைக்க பொதுநிதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் அருகில் உள்ள சிவந்தி நகர் 1 வது மற்றும் 2வது தெருக்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஈரக்களவை (WMM) சாலையின் மீது தார்தளம் அமைத்துத்தர கோரியுள்ளதை மன்றத்தின் பாவைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1. கணபதி நகர் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் அரசின் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி சிவந்தி நகர் 1வது மற்றும் 2வது தெருக்களில் தார்தளம் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிநோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

இந்நகராட்சியில் பொதுநிதி 2024-25ன் கீழ் வார்டு எண்.5ல் உள்ள திருமாநகர் மெயின் தெருவில் ரூ.12.25 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.651 நாள்.22.08.2024ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, 21.10.2024ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மதிப்பீட்டை விட 0.10% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.அருண்குமார் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.711 நாள்.30.10.2024ன்படி ஏற்றுக்கொண்டதையடுத்து முறையே ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான மூலமதிப்பீட்டில் சாலையின் நீளம் 303.00 மீட்டர் நீளத்தில் 4.00 மீட்டர் அகலத்தில் தார்த்தளம் புதுப்பித்திடும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி சாலையில் சுமார் 190.00 மீட்டர் நீளத்தில் 4.00 மீட்டர் அகலத்திலும் 40.00 மீட்டர் நீளத்தில் 6.00 மீட்டர் அகலத்திற்கு சாலை கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையால் சாலை பழுதடைந்து போக்குவரத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மூலமதிப்பீட்டின்படி நேரடியாக தார்த்தளம் புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கடந்த பருவ மழையினால் சேதமடைந்த சாலையினை செப்பனிட்டு தார்சாலை அமைத்துத்தர கோரியுள்ளார். அதன்படி பழுதடைந்த சாலையினை ஈரக்களவை (WMM) கொண்டு சுமார் 190.00 மீட்டர் நீளத்தில் 4.00 மீட்டர் அகலத்திலும் 40.00 மீட்டர் நீளத்தில் 6.00 மீட்டர் அகலத்திற்கு மட்டும் தற்போது பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததார் மூலம் சாலையின் தன்மையினை கருத்தில் கொண்டு கூடுதல் இனமாக ஈரக்களவை (WMM) அமைக்கும் பணியினை மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1. சாலையின் தன்மையினை கருத்தில் கொண்டு கூடுதல் இனமாக ஈரக்களவை (WMM) அமைக்கும் பணியினை மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகளில் சுற்றி திரியும் மாடுகளால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மாடுகள் பராமரிக்கும் உரிமையாளர்கள் வீடுகளில் வைத்து பராமரிக்காமல் சாலைகளில் சுற்றித்திரிய விடுவதால் மாடுகளால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுவதுடன் விபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனவே , இதனை தடுக்கும் பொருட்டு மாடுகளை வைத்திருப்பவர்களுக்கு பலமுறை சுகாதார சட்டப்படி கோப்பில் கொடுக்கப்பட்டுள்ள மாடுகளை பிடித்து அபராதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மாடுகளை வைத்திருப்பவர்கள் மீண்டும் இதே தவறினை செய்து வருகின்றனர். நகராட்சியில் போதிய இடவசதி இல்லாததால் இந்த மாடுகளை பிடிக்கவும், பிடித்த மாடுகளை பாதுகாப்பாக கொண்டு சென்று பராமரிக்கவும் M/s.Gauraksha Commando Force No.34/A-1st Floor Appavu Nagar Thally Bharat Road Hosur-603109 என்ற நிறுவனம் விருப்பக்கடிதம் கொடுத்துள்ளார்கள். எனவே பிடிக்கப்படும் மாடுகளுக்கு மாடு ஒன்றுக்கு ரூ.**3000/–** மற்றும் கன்று ஒன்றுக்கு ரூ.**1500/–** எனவும் தண்டம் வசூலித்து அந்த தொகையினை கோசாலைக்கு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் (OSR Land) ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதை தவிர்க்க, மாங்காடு நகராட்சியில் மொத்தம் 24 திறந்த ஒதுக்கீடு இடங்கள் உள்ளது. மேற்படி இடங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் நிகழாவண்ணம் நகராட்சி மூலம் முள்வேலி அமைத்து பெயர் பலகைகள் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், மேற்படி முள்வேலி அமைத்தல் மற்றும் பெயர் பலகை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அ.கு.</u>

1) திறந்த வெளி ஒதுக்கீடு இடங்களின் அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) மேற்படி பணிக்குண்டான தொகையினை சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்த வெளி ஒதுக்கீடு நிதியின் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (Turip)2024-25 (Phase IV) ன்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் செயல்முறை ந.க.எண்.2458/2024/SS1, நாள்.20.01.2025 ன்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு கடந்த 17.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. | பணியின் விவரம் | மதிப்பீட்டு | ஒப்பந்தப்புள்ளி அளித்த | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|

| எண் | | தொகை ரூ. லட்சத்தில் | நிறுவனத்தின் விவரம் | விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அம்பாள் கெஜலட்சுமி நகர் பேஸ்-2, திருவள்ளுவர் சிட்டி பேஸ்-2 1வது தெரு, திருவள்ளுவர் சிட்டி பேஸ்-2 1வது குறுக்கு தெரு, திருவள்ளுவர் சிட்டி பேஸ்-2 குறுக்கு தெரு, திருவள்ளுவர் சிட்டி பேஸ்-2 3வது தெரு, கணபதி நகர் மெயின் ரோடு, கணபதி நகர் 2வது குறுக்கு தெரு, கணபதி நகர் 1வது குறுக்கு தெரு, சக்தி நகர் விரிவு காந்தி நகர் குறுக்கு தெரு, சக்தி நகர் 4வது தெரு, சக்தி நகர் 5வது தெரு, சக்தி நகர் 1வது தெரு, அம்பாள் கெஜலட்சுமி நகர் 1வது தெரு, ஏ.எஸ்.ஆர் சிட்டி 3வது தெரு, அம்பாள் கெஜலட்சுமி நகர் 1வது குறுக்கு தெரு, ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 75.00 | திருவாளர்.தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.06% குறைவு |
| | | | திரு. எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.80% அதிகம் |
| 2 | பத்திரிமேடு பெருமாள் கோயில் தெரு, மாசிலாமணி நகர் மெயின் ரோடு, மாசிலாமணி நகர் 1வது குறுக்கு தெரு, மாசிலாமணி நகர் 1வது தெரு, மாசிலாமணி நகர், அலெக்ஸ் நகர் கந்தன் தெரு, அலெக்ஸ் நகர் 3வது தெரு, அலெக்ஸ் நகர் 3வது குறுக்கு தெரு, சுபம் நகர் 6வது தெரு, மற்றும் வைகுண்டபெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 75.00 | திருவாளர்.தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.06% குறைவு |
| | | | திரு. எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.76% அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீடு தொகையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்த்ப்புள்ளியை ஏற்று முறையே ஒப்பந்தப்புள்ளி ஏற்பு ( Letter of Acceptance) வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.- மேற்கண்ட பணியின் மதிப்பீட்டு விலையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.25**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை ந.க.எண்.31917/2019/டிபி2 , நாள்.13.02.2025ன் படி நகராட்சிகளில் கட்டட வரைபட அனுமதி சுய சான்றளிப்பு அடிப்படையிலான குடியிருப்பு கட்டடங்கள் (3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமான பரப்பு) தவிர்த்து இதர குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டட வரைபட அனுமதி வழங்குதல் ,ஒற்றை சாளர இணைய முகப்பில் (Single window portal ) மென்பொருள் தொகுதியை செயல்படுத்துதல் ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக கடிதம் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தை மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**பொருள் எண்.26**

இந்நகராட்சியில் பொதுநிதி 2024-25ன் கீழ் வார்டு எண்.27ல் உள்ள ரசீதாபீ நகர் (63.00மீ நீளம் மற்றும் 4.00மீ அகலம்), பாலாஜி நகர் (72.00மீ நீளம் மற்றும் 4.00மீ அகலம்), மற்றும் எஸ்.கே.எம்.நகர் (40.00மீ நீளம் மற்றும் 4.00மீ அகலம்) ஆகிய பகுதிகளில் ரூ.10.50 லட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.608 நாள்.24.06.2024ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, 18.10.2024ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மதிப்பீட்டை விட 0.07% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.அருண்குமார் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.711/நாள்.30.10.2024 அன்று ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான மூலமதிப்பீட்டில் மேற்கண்ட மூன்று தெருக்களிலும் பேவர் பிளாக் சாலை அமைக்க மேற்படி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி ரசீதாபீ நகர் மற்றும் எஸ்.கே.எம்.நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் அகலமாக உள்ளதாலும், இப்பகுதிகள் மழைநீர் தேங்குவதால் மழைநீர் கால்வாய் வசதியினை மேற்கொண்ட பின்னர் சாலை பழுதடையா வன்னம் தார்சாலை அமைத்துத்தருமாறும் பாலாஜி நகர் பகுதி தற்போது தாழ்வான பகுதியாக இருந்ததால் பருவ மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்திற்கு இடையூராக இருந்த நிலையில் தற்போது மழைநீர் கால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் சாலை சேதமடைவதை தவிர்க்க சிமெண்ட் சாலையாக அமைத்து தருமாறு முறையே நகர்மன்ற துணைத்தலைவர் கோரியுள்ளார். எனவே தற்போது பணி உத்திரவு வழங்கியுள்ள பணியின் கீழ் பேவர்பிளாக் சாலைக்கு பதிலாக பாலாஜி நகர் பகுதியில் மட்டும் சுமார் 94.00 மீ நீளத்தில் 5.00 மீ அகலத்தில் சிமெண்ட் சாலை பணி மேற்கொள்ள ஏதுவாக கூடுதல் இனங்களை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மேற்படி தெருக்களின் தன்மையை கருத்தில் கொண்டு பேவர்பிளாக் சாலைக்கு மாற்றாக சிமெண்ட் சாலை அமைக்கவும் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிநோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் நடவடிக்கையாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி களப்பணியாளர்கள் 52 நபர்களை வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அழிக்கும் பணியினை செய்து வருகின்றனர்.

இந்தப் பணியின் பொழுது இவர்களது வீடுகளை ஆய்வு செய்வதை அறிவதற்கு வீடுகளில் 52 வாரங்களுக்குண்டான ஸ்டிக்கர் ஒட்டப்படவேண்டும். மேலும் இந்த பணியின் பொழுது பயன்படுத்த பிரத்யோக ரிஜிஸ்டர் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் ஆய்வின் பொழுது பணிபுரிவர்கள் மாஸ்க், கைப்பை, பெரியகரண்டி, சுத்தியல், பிளிச்சிங் பவுடர் எடுத்தச் செல்ல பிளாஸ்டிக் பாத்திரம் ஆகியவை அவசியமாக தேவைப்படுகிறது. எனவே இவைகளை வாங்குவதற்கு தேவையான தோராய செலவினம் ரூ.5,00,000/- லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.28**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் மனைப்பிரிவுகளுக்கு உரிய மனைப்பிரிவு/ கட்டிட அனுமதி வழங்கும்போது, ஆன்லைன் (Online) மூலமாக பெறப்படும் மனுக்களுக்கு உண்டான உள்கட்டமைப்பு கட்டணங்கள் DC & OSR Charges உரிய தலைப்பில் உறுப்பினர் (ம) செயலர், CMDA, சென்னை அவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி நிதியில், நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்கள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கென CMDA, சென்னை அலுவலகத்திலிருந்து இந்நகராட்சிக்கு 2014-2015 முதல் 2015-2016ம் ஆண்டு மற்றும் 2016-2017 முதல் 2018-2019ம் ஆண்டு வரையிலான DC & OSR Chargesக்கான 75 % மான்யத் தொகை மொத்தம் ரூ.3,69,36,727/-ஐ கீழ்க்கண்ட விவரப்படி விடுவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆண்டு | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2014-2015 (ம) 2015-2016 | 1,77,88,441 |
| 2 | 2016-2017 முதல் 2018-2019 | 1,91,48,286 |
| | **மொத்தம்** | **3,69,36,727** |

மேற்படி நகராட்சி பூங்கா பராமரிப்புகளுக்கென CMDA, சென்னை அலுவலகத்திலிருந்து மான்யத் தொகை விடுவிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண்.29**

இந்நகராட்சியில் 76 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு நகராட்சி அலுவலக வளாகத்தில் 76 வது குடியரசு தின விழாவை கொண்டாடும் வகையில் சார்மினா பந்தல், சீரியல் செட், மேடை அமைத்தல், நாற்காலிகள், சிவப்பு கம்பளம், ஸ்பீக்கர், மைக்செட், பலூன் அலங்காரம் மற்றும் வருகைபுரிந்தவர்களுக்கு உணவளித்தல் ஆகியவற்றிக்கு பட்டியல் தொகை திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.85,000/- பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு.-
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.85,000/-ஐ திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**பொருள் எண்.30**

மாங்காடு நகராட்சி வார்டு எண்.22 பாலாண்டீஸ்வரன் கோயில் தெருவில் அமைந்துள்ள குடிநீர் பம்ப் ரூம் மற்றும் குடிநீர் தொட்டி சுமார் 40 வருடங்கள் ஆகி மிகவும் பழுதடைந்த நிலையில் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதியில் சமுக விரோத செயல்கள் நடைபெறுவதாக புகார்கள் வந்தவன்னம் உள்ளது. எனவே மேற்படி பாலாண்டீஸ்வரன் கோயில் தெருவில் அமைந்துள்ள குடிநீர் பம்ப் ரூம் மற்றும் குடிநீர் தொட்டி ஆகியவற்றை அகற்றிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.31**

இந்நகராட்சியில் ஏற்கனவே கீழ்கண்ட விவரப்படியான தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டு இருந்தது அதன் விவரம் பின்வருமாறு,

1. 40 W குழல் விளக்குகள் - 815 Nos
2. 36 W CFL விளக்குகள் - 929 Nos
3. 250 W சோடியம் ஆவி விளக்குகள் - 530 Nos
4. LED விளக்குகள் - 1054 Nos

   (a. 30w LED விளக்குகள் - 85 Nos
   (b. 80w LED விளக்குகள் - 615 Nos
   (c. 100w LED விளக்குகள் - 264 Nos
   (d. 200w LED விளக்குகள் - 90 Nos
   1054 Nos

----------------

மொத்தம் - 3328 Nos

-----------------

மேற்கண்ட மொத்தம் உள்ள 3328 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகளில் LED விளக்குகள் 1054 நீங்கலாக ஏனைய 2274 எண்ணிகையிலான விளக்குகளை LED விளக்குளாக மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 1054 எண்ணிக்கையிலான LED விளக்குகளில் சுமார் 90 எண்ணிக்கையிலான 200W LED விளக்குகள் இந்நகராட்சிக்கு சொந்தமான 19 எண்ணிக்கையிலான உயர்மின் கோபுர விளக்குகளில் பொறுத்தியுள்ள நிலையில் பயன்பாட்டில் உள்ளது. இதை தவிர 19 எண்ணிக்கையிலான உயர்மின் கோபுர விளக்குகளில் சுமார் 104 எண்ணிக்கையிலான 400W MH விளக்குள் இருந்த நிலையில் முற்றிலும் பழுதடைந்து எரியாத நிலையில் உள்ளது. இவற்றிற்கான பராமரிப்பு பணிகள் ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்படுள்ள ஒப்பந்தப்புள்ளி விடுபட்டுள்ளதால் இதுநாள் வரை இவ்விளக்குகளை பராமரிக்க இயலாத நிலையில் உள்ளதால் இது தொடர்பாக கடந்த நகர்மன்ற கூட்டங்களில் முறையே மன்ற உறுப்பினர்கள் துணைத்தலைர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரிடமிருந்து நேரடியாக புகார்கள் பெறப்பட்டதை தொடர்ந்து விடுபட்ட 104 எண்ணிக்கையிலான MH விளக்குகளை தற்போது 200W திறன் கொண்ட LED அடர்மின் விளக்குகளாக மாற்றியமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.19.70 லட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- முக்கியமான சாலை சந்திப்புகளில் அமைக்கப்பட்டு பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ள மேற்கண்ட 104 எண்ணிக்கையிலான MH விளக்குகளை மின் பயன்பாட்டு கட்டணத்தினை குறைத்திடும் வகையில் தற்போது 200W திறன் கொண்ட LED அடர்மின் விளக்குகளாக மாற்றியமைக்கவும் அதற்கான செலவினத்தினை அவசியம் கருதி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.32**

மாங்காடு நகராட்சியில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிதியின் கீழ் இந்நகராட்சி பகுதியில் உள்ள பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள ஒதுக்கீட்டு இடங்களில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | திருவள்ளூவர் சிட்டி பூங்கா சுற்றுச்சுவர் அமைத்தல் | 20.00 |
| 2 | 3 | சக்தி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் பணி | 20.00 |
| 3 | 6 | அடிசன் நகர் பூங்கா நடைபாதை மற்றும் மேம்பாடு பணி செய்தல் | 20.00 |
| 4 | 12 | சிவானந்தா நகர் பூங்கா கழிவறை கட்டுதல் | 3.25 |
| 5 | 17 | செல்வகணபதி நகர் பூங்காவில் சுற்றுசுவர் அமைத்தல் | 20.00 |
| 6 | 26 | அருணாச்சலம் நகர் பூங்காவிற்கு சுற்றுசுவர் அமைத்தல் | 17.50 |

**பொருள் எண்.33**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | அம்பாள் கெஜலட்சுமி நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |
| 2 | 1 | சூர்யா நகர் பகுதியில் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |
| 3 | 1 | அம்பள் கெஜலட்சுமி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (R.O.Plant). | 14.00 |
| 4 | 3 | சக்தி நகர் பார்க் போர்வெல் அமைத்தல் | 2.30 |
| 5 | 3 | 3வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 6 | 4 | 4வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 7 | 6 | 6வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 8 | 6 | அடிசன் நகர் பகுதியில் புதிய ஆழ்துளைகிணறு அமைத்தல் | 2.30 |
| 9 | 7 | வசந்தப்புரம் ஸ்டெப்ஸ்டோன் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.30 |
| 10 | 8 | வார்டு எண்.8 பகுதியில்ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 11 | 8 | வசந்தபுரம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.30 |
| 12 | 9 | பாலாஜி அம்பாள் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (R.O.Plant) | 14.00 |
| 13 | 12 | சிவானந்தா நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 4.50 |
| 14 | 14 | வார்டு எண்.14 பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 15 | 15 | 15வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 16 | 16 | அப்பாவு நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 4.50 |
| 17 | 21 | எஸ்எம்ஏ ஹவுஸ் பகுதியில் புதிய ஆழ்துளைகிணறு அமைத்தல் | 2.30 |
| 18 | 21 | மங்களபுரம் பகுதியில் சின்டெக்ஸ் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 3.00 |

| | | | |
|---|---|---|---|
| 19 | 23 | பன்னீர்செல்வம் நகர் மற்றும் சரஸ்வதி நகர் பைப்லைன் அமைத்தல் | 1.00 |
| 20 | 25 | வாலாஜா தெரு ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 21 | 25 | பட்டூர் குளம் அருகில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 22 | 26 | பட்டூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.30 |
| 23 | 26 | பட்டூர் முஸ்லீம் பள்ளி வளாகத்தில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 1.50 |
| 24 | 26 | 26வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 25 | 27 | 27வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் அமைத்தல் | 2.30 |
| 26 | 27 | சாந்தி நகர் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 27 | 4,5,7,18, 25,26 | பத்ரிமேடு, ஸ்டெப்ஸ்டோன் , மீனாட்சி நகர் அலெக்ஸ் நகர், பாத்திமா நகர், சார்லஸ் நகர், ஆயிஷா நகர், திருவேங்கடம் நகர் பகுதியில் பைப்லைன் அமைத்தல் | 9.50 |
| 28 | - | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு களில் உள்ள மின்மோட்டார்களை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | 9.00 |

**பொருள் எண்.34**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | விக்னேஷ் நகர் 1வது மெயின்தெருவில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 3.75 |
| 2 | 3 | சிவந்தி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 4.00 |
| 3 | 3 | பிரியம் அவென்யூ 1வது குறுக்கு தெரு,3வது குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2.10 |
| 4 | 3 | சிவந்தி நகர் மெயின்ரோடு, சக்தி நகர் குறுக்கு தெரு, சக்தி நகர் மெயின்ரோடு பிரியம் அவென்யூ மெயின்ரோடு தார் சாலை | 19.85 |
| 5 | 5 | திருமா நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1.70 |
| 6 | 5 | சாந்தி நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு செய்தல் | 1.90 |
| 7 | 6 | பத்மாவதி நகர் 4 வது குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.90 |
| 8 | 6 | வள்ளலார் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3.40 |
| 9 | 6 | ராமகிருஷ்ணா அவென்யூ 2வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 17.90 |
| 10 | 6 | ராமகிருஷ்ணா அவென்யூ 4வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.80 |
| 11 | 6 | ஏ.ஆர் நகர் பிரதான தெரு சிமெண்ட் தளம் அமைத்தல் | 10.60 |
| 12 | 7 | வசந்தபுரம் மாருதி என்கிளேவ் 2வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 18.85 |
| 13 | 7 | சுதா நகர் மழைநீர் கால்வாய் மீது மூடு பலகை அமைத்தல் | 6.10 |
| 14 | 8 | வசந்தம் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 11.60 |

| | | | |
|---|---|---|---|
| 15 | 8 | வெங்கடேஷ்வரா  தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 12.10 |
| 16 | 9 | கிழக்கு காமாட்சியம்மன் நகர் பேவர் பிளாக் சாலை சீரமைப்பு செய்தல் | 1.10 |
| 17 | 14 | ஜனனி நகர் குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 17/90 |
| 18 | 14 | மேல்ரகுநாதபுரம் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.00 |
| 19 | 16 | அப்பாவு நகர் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.50 |
| 20 | 16 | அப்பாவு நகர்  சிமெண்ட் தளம் அமைத்தல் | 2.50 |
| 21 | 17 | வெள்ளீஸ்வரன்  1வது மற்றும் 2 வது குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல் | 2.65 |
| 22 | 17 | முத்து மாரியம்மன் கோவில் தெரு தார் சலை அமைத்தல் | 12.20 |
| 23 | 17 | மாரியம்மன் கோயில் தெருவில் அம்பேத்கார் விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளி அரங்கம் அமைத்தல் | 20.00 |
| 24 | 17 | மாரியம்மன் கோயில் தெருவில் அம்பேத்கார் விளையாட்டு மைதானத்தில் மின் விளக்கு அமைத்தல் | 9.00 |
| 25 | 18 | காமாட்சி  அவென்யூ  1வது, 2வது,3வது குறுக்கு தெருவில் தார்சாலை அமைத்தல் | 10.00 |
| 26 | 18 | திருவேங்கடம் நகரில்  தார் சாலை அமைத்தல் | 13.35 |
| 27 | 19 | மேலாண்டை மாடவீதி மழைநீர் கால்வாய் சீரமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 14.90 |
| 28 | 22 | பாலாண்டீஸ்வரர் கோயில் தெரு மழைநீர் கால்வாய் சீரமைத்த்ல் | 10.90 |
| 29 | 23 | மேல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.75 |
| 30 | 23 | மேல்  தெருவில் கால்வாய்  தூர் வாருதல் மற்றும்  மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 5.75 |
| 31 | 23 | கே.கே.நகர் 1வது தெருவில்  பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 17.30 |
| 32 | 23 | கே.கே.நகர் 12 வது தெருவில்  பேவர் பிளாக்  சாலை அமைத்தல் | 9.10 |
| 33 | 23 | பன்னீர்செல்வம் நகர் தார்சாலை அமைத்தல் | 3.30 |
| 34 | 23 | மங்களபுரம் சுடுகாடு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.80 |
| 35 | 23 | சரஸ்வதி நகர் தார்சாலை அமைத்தல் | 8.00 |
| 36 | 25 | வன்னியர் பட்டு பகுதியில்  மழைநீர் வடிகால்  அமைத்தல் | 6.65 |
| 37 | 25 | வன்னியர் பட்டு  குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.10 |
| 38 | 25 | பட்டூர் வண்ணான்குளம்  சுற்று சுவர்  அமைத்தல் | 19.85 |
| 39 | 25 | இந்திரா நகர் 1வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 10.60 |
| 40 | 25 | பட்டூர் ஆரம்ப  துணை சுகாதார நிலையத்தில்  சுற்று சுவர் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 6.00 |
| 41 | 26 | பட்டூர் பள்ளியில் கூடுதல் மற்றும்  மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 2.80 |
| 42 | 26 | பட்டூர் தெற்கு தெருவில் சிமெண்ட தளம் அமைத்தல் | 13.00 |
| 43 | 26 | பட்டூர் சுல்தான்  பேட்டை பகுதியில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 5.50 |
| 44 | 26 | காயிதேமில்லத்  நகர் முதல் முஸ்லீம் சுடுகாடு வரை தார் சாலை அமைத்தல் | 19.30 |
| 45 | 26 | சார்லஸ் நகர் மெயின்ரோடு தார்சாலை அமைத்தல் | 4.60 |
| 46 | 26 | சுல்தான்பேட்டை சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.70 |
| 47 | 26 | வடக்கு தெரு தார்சைலை அமைத்தல் | 11.70 |
| 48 | 27 | பானு நகர் 5 வது குறுக்கு தெரு  பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.65 |

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி